பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 24 | செவ்வாய்க்கிழமை 08.01.2019 | கதிர் 64

### இனி இது ரகசியம் அல்ல!

வயது முதிர்ந்த ஒருவர் நேற்று அலுவலகத்துக்கு வந்தார். முடிந்த வாரத்துக்குரிய 'காலைக் கதிர்' கோவைகளைப் பார்வையிடலாமா என்று கேட்டார். அலுவலக உதவியாளர் ஒருவர் அவருக்கு உதவி செய்தார். ஒரு மேசையில் கடந்த வார நாளிதழ் கட்டோடு மூழ்கிப் போனார். பக்கம் 02

# வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும்

## அதற்கான ஒழுங்கமைப்பக் கவனிக்க வழிகாட்டல் குழுவின் கூட்டம் நாளை


கொழும்பு, ஜனவரி 08

கடந்த நவம்பர் 7ஆம் திகதி கூடவிருந்த நிலையில் அரசியல் குழப்பத்தால் தள்ளிப்போன அரசமைப்புப் பேரவையின் கூட்டம் பெரும்பாலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று நடைபெறும். புதிய அரசமைப்புக் கான நகல் குறித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாகக் கூட்டுவதற்கான ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு நாளை பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் அதன் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கூடுகின்றது. பக்கம் 02

## வடக்கு – கிழக்கு இணைப்பு ஒருபோதும் சாத்தியமில்லை

### அமைச்சர் ஹக்கீம் திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 08

வடக்கு-கிழக்கைஇணைத்து தனியான நிர்வாக அலகை வழங்க இந்த அரசு முயற்சிக் கிறது என்று வதந்திகள் உலவி வருகின்றன. அந்தச் செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை பக்கம் 11

## நாமல் குமாரவுக்கு பாதுகாப்பு வழங்குக!

### வாசுதேவ கோரிக்கை

கொழும்பு, ஜன. 08

நாமல் குமாரவுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதுடன், பொலிஸாரின் விசாரணைகளில் அழுத்தங்கள் இல்லாமல் அவர் விசாரிக்கப்படவேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். பக்கம் 11

## மாணவர்கள் பாடநூலில் அடிப்படைச் சட்டக்கல்வி

### அமைச்சரவை நேற்று ஒப்புதல்

கொழும்பு, ஜன. 08

சட்டக் கல்வியைப் பாடசாலைப் பாடத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பாடசாலைக் கல்வித் திட்டத்தில் அரசமைப்பு உள்ளிட்ட அடிப்படைச் சட்டங்களை இணைக்கவேண்டும். அதனூடாக மாணவர்களுக்கான பாடநூலில் அவை உள்ளடக்குவதற்கு கல்வி அமைச்சுக்கு அதிகாரம் பக்கம் 11

## வடக்கின் ஆளுநரானார் கலாநிதி சுரேன் ராகவன்



கொழும்பு, ஜன. 08

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இவருக்கான நியமனம் நேற்று வழங்கப் பட்டது. பக்கம் 11

## கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழுக் கூட்டம் இன்று காலை

கொழும்பு, ஜன. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போது புதிய பக்கம் 11

## செலவினம் நாலரை லட்சம் கோடி ரூபா வரலாற்றில் மிகப் பெரிய பட்ஜெட்

### ஒப்புதல் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, ஜன. 08

2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட வரைவுக்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மிகப் பெரிய வரவு – செலவுத் திட்டம் நாடாளுமன்றில் எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி முன்மொழியப்படவுள்ளது என்று பக்கம் 02

## அரசியல் உறுதியற்ற நிலையால் பலாலி விமான நிலைய அபிவிருத்தியில் இழுபறி

கொழும்பு, ஜன. 08

இலங்கையின் அரசியல் உறுதியற்ற நிலையினால், இந்தியாவின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம், பக்கம் 11

## மைத்திரியின் செயலுக்கு பிரதமர் ரணில் பாராட்டு

கொழும்பு, ஜன. 08

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்கச் சபைகளின் தலைவர்களையும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் நியமிப்பதற்கு பக்கம் 11

## 118 கிலோ கிராம் கஞ்சா நேற்று வல்லைக் கடற்கரையில் மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 08

118 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப் பொருள் பொதி ஒன்றை வல்வெட்டித்துறை கடற்கரையிலிருந்து கடற்படையினர் மீட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 11

## ராஜபக்ஷ குடும்பத்தினரை சிறையில் அடைக்க முயற்சி

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 08

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை போர்க்குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சிறைக்குள் அடைக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என ஸ்ரீலங்கா பக்கம் 11

## 4 தமிழக மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 08

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் படகொன்றில் நேற்று பக்கம் 11

# இன்று முதல் 14 ஆம் திகதி வரையில் இயற்கைவழி விவசாய வார நிகழ்வுகள்

புதிய வெளிச்சத்தின் அனுசரணையுடன் இயற்கை வழி இயக்கத்தினால் இன்று ஜனவரி 08 முதல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதி இயற்கைவழி விவசாய வாரமாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. இந்த வாரத்தில் வடக்கின் சகல மாவட் டங்களிலும் இயற்கைவழி ஆர்வலர்களின் பங் கெடுப்புடன் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்று காலை 9 மணி முதல் 1 மணிவரை மன் னாரில் தட்சணமருதமடுவில் பண்ணைப் பெண் கள் அமைப்பின் ஒழுங்கமைப்பில் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நாளை தொடக்கம் தினசரி காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறும் மையங்களின் விவரம் வருமாறு:-

நாளை புதன்று :- வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள இலங்கை விவசாயக் கல்லூரியில்.

நாளை மறுதினம் வியாழனன்று :- கிளிநொச்சி நகரில், கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்துக்கு எதிரில்.

11 ஆம் திகதி வெள்ளியன்று :- ஜெயபுரம் பல்லவராயன் கட்டில் அமைந்துள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் விவசாயப் பயிற்சிப் பண் ணையில் (காலை 9 மணி முதல்).

12 ஆம் திகதி சனியன்று :- மன்னாரில், அடம் பன் பண்ணையில்.

பாடசாலை மாணவர்களிற்கான விழிப்புணர்வு, உள்ளூர் விவசாயிகளுடனான கலந்துரையாடல், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிற்குரிய அங் காடிகளின் தொடக்க நிகழ்வு என்பன மேற்குறித்த நிகழ்வுகளின் முக்கிய அம்சங்களாகும்.

13 ஆம் திகதி ஞாயிறன்று :- யாழ்ப்பாணத்தில், புன்னாலைக்கட்டுவனில் உள்ள Margosa Green இல். இந்நிகழ்வில் இயற்கைவழி இயக்கத்தின் இணையத்தளம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

14 ஆம் திகது திங்களன்று :- முல்லைத்தீவு கைவேலியில் அமைந்துள்ள செல்வபாக்கியம் பண்ணையில். பாடசாலை மாணவர்களிற்கான விழிப்புணர்வு, உள்ளூர் விவசாயிகளுடனான கலந்துரையாடல் என்பவற்றுடன் இயற்கைவழி உள்ளீடுகள் உற்பத்தி தொடர்பான பயிற்சி என்பன நிகழ்வின் முக்கிய அம்சங்களாகும். இந்த நிகழ்வு களில் அவசியம் கலந்துகொள்ளுமாறு இயற்கை வழி இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களிற்கு இயற்கைவழிச் செயற் பாட்டாளர் கு. வசீகரன் (077 378 8795 அல்லது 075 973 2169) அவர்களைத் தொடர்பு கொள்ள லாம் என்றும் கூறப்பட்டது.

# எம்.பிக்கள் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும்

## கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 08

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 இல் இருந்து குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினரான லால் காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எந்தவொரு யோசனைக்கும், ஜே.வி.பி. துணைபோகாது. புதிய அரசமைப்பைக் கொண்டுவர வேண்டும் என்பதில் நாம் கொள்கை ரீதியாக இணங்கு கிறோம்.

ஆனால், நாடாளுமன்றின் இப்போதைய நிலைமையில் இதனை கொண்டு வர முடியுமா என்பது எமக்குத் தெரியவில்லை. இதனாலேயே நாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கும் சட்டத் திருத்தத்தைத் தனியாகக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறோம்.

புதிய அரசமைப்பு தொடர்பில் எந்தவொரு தரப்புடனும் கலந்துரையாட நாம் தயாராகவே இருக்கிறோம். ஆனால், இதுவரை இது தொடர்பில் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

நாம் கொண்டுவரவுள்ள 20 ஆவது திருத்தச் சட்டவரைவில், நிறை வேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் சரத்து மட்டுமன்றி, கட்சித் தாவலுக்கு எதிரான கடுமையான சரத்தையும் இணைத்துள் ளோம்–என்றார். (ஐ)

# ரெஜினோல்ட் குரேயுக்கு ஆப்பு வைத்தார் மைத்திரி

## இனி ஆளுநர் பதவி இல்லை

கொழும்பு, ஜன. 08

வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரேயுக்கு ஜனாதிபதியால் மீண்டும் ஆளுநர் பதவி வழங்கப்பட மாட்டாது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான ரெஜினோல்ட் குரே, சந்திரிகா அம்மையாரின் ஆலோசனையின் பிரகாரம், ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் சூழ்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டார் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் 23 உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள ரெஜினோல்ட் குரேயின் இல்லத்தில் அண்மையில் இரகசிய சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். இதையடுத்தே சுதந்திரக்கட்சியின் தலைமையகம் கூட இழுத்து மூடப்பட்டிருந்தது.

குறித்த இரகசியச்சந்திப்பானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கிலிகொள்ள வைத்தது. இதனால், கடுப்பாகிய அவர், ரெஜினோல்ட் குரேயுக்கு ஆப்பு வைப்பதற்காக அனைத்து ஆளுநர்களையும் பதவி துறக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

தற்போது எட்டு மாகாணசபைகளுக்கு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாணத்துக்கும் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்துக்கு மட்டுமே இன்னும் எவரும் நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதியிடம் ரெஜினோல்ட் குரே பகிரங்கமாக மன்னிப்புகோரும் பட்சத்திலேயே அவருக்கு அப்பதவி வழங்கப்படலாம்.

அவ்வாறு இல்லையெனில் பெண்ணொருவருக்கு அது வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், மன்னிப்பு கேட்கும் நிலைப்பாட்டில் குரே இல்லையெனக் கூறப்படுகின்றது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி என்னதான் தேடுகின்றார் என்று எட்டிப் பார்த்தேன். கடந்த சில நாளாக வந்த *'இனி இது இரகசியமல்ல'* பக்கத்தை உருட்டிப் புரட்டித் தேடிக் கொண்டிருந்தார். விட்டுவிட்டேன்.

ஒரு பத்துப்பதினைந்து நிமிடத்தின் பின்னர், பத்திரிகையின் கோவையையும் தூக்கிக்கொண்டு என் மேசைக்கு வந்தார். அவர் தேடி வந்த செய்தி அவருக்குக் கிடைத்திருக்கும் போல.

கடந்த வியாழக்கிழமை பிரசுரமான *'இனி இது இரகசியமல்ல'* பத்திதான் அவருக்கு சர்ச்சைக் குரியதாக இருந்தது.

எம்.பி.சுமந்திரனின் அல்லக்கைகள் நால்வர் குறித்து நான் அதில் பிரஸ்தாபித்திருந்தேன். சட்டத்தரணி சயந்தன் பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்தேன்.

*"தமிழ்க் கூட்டமைப்பின் உருவாக்கம் புலிகளுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் செய்யப்பட்ட 'டீல்' என்று சயந்தன் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டார்."* – என நான் அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

*"இப்படித் தேவையின்றிப் பேசி உங்கள் ஆள் (சயந்தன்) சர்ச்சையை ஏற்படுத்துகின்றாரே. இது தேவைதானா? இப்படிப் பேச வேண்டாம் என்று நீங்கள் சயந்தனுக்கு 'அட்வைஸ்' சொல்லுவதில்லையா?"* – என்று நான் சுமந்திரனிடம் கேட்டேன் எனவும் அதில் எழுதியிருந்தேன்.

*"உண்மை பேசுபவர்களை உண்மை பேசவேண்டாம் என்று நான் மறிக்க மாட்டேன். அப்படி உண்மையைப் பேச வேண்டாம் என்று மறிக்கலாமா?"* – என்று சுமந்திரன் என்னிடம் திருப்பிக் கேட்க நான் மலைத்துப் போனேன் எனவும் அதில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

அவ்வளவையும் வாசித்துக் காட்டினார் அந்த வயோதிபர். பிறகு என் முகத்தைப் பார்த்தார். *"இவ்வளவும் உண்மையா?"* – என்று என்னைப் பார்த்துக் கேட்டார். நான் *"ஓம் ஐயா"* – என்றேன்.

*"நீர் சுமந்திரனிடம் பதில் கேள்வியேதும் கேட்கவில்லையா?"* – என்றார் அவர். நான் இல்லை எனத் தலையாட்டினேன்.

*"என்ன சிரேஷ்ட பத்திரிகையாளர் நீர்?"* என்ற மாதிரி ஒரு வினாவை ஏளனத்தோடு தொடுத்தார் அவர்.

*"கூட்டமைப்பு உருவாக்கம் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் புலிகளுக்குமான டீல் என்கிறார் ஒருவர். அது உண்மை, அந்த உண்மையைப் பேச வேண்டாம் என்று நான் மறிக்கமாட்டேன் என்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர்.*

*"ஆனால், சிலவருடங்களுக்கு முன்னம் உவர்கள் இரண்டு பேரினதும் தலைவர் சம்பந்தன் சொன்னவை உங்களுக்கு நினைவுக்கு வரவில்லையா? கூட்டமைப்பு உருவாக்கத்துக்கும் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாக எனக்குத் தெரியாது, அதில் புலிகள் சம்பந்தப்பட்டனர் என்று நான் அறியேன் என்றெல்லாம் தொலைக்காட்சிப் பேட்டியில் சம்பந்தன் கூறினவர். சயந்தன் கூறிய 'டீல்' இப்போது உண்மை என்று சுமந்திரன் சொன்னால், அப்போது சம்பந்தன் கூறியது பொய்தானே. நீர் இதனை சுமந்திரனிடம் கேட்டிருக்க வேண்டும் அல்லவா? என்ன பத்திரிகையாளர் நீர்?"* – என்று நக்கல் பார்வை பார்த்தார் அவர்.

எனக்குப் பதில் கூறிச் சளாப்ப எதுவும் இருக்கவில்லை.

*"ஓம் ஐயா. நீங்கள் சொல்வது சரி. நான் கட்டாயம் கேட்டிருக்க வேண்டும். அந்தச் சமயம் பட்டென்று அந்த விடயம் என் நினைவுக்கு வரவில்லை"* என்று கூறிச் சமாளித்தேன் நான்.

*"உண்மையான பத்திரிகையாளன் எண்டால் இப்படி பழைய விடயங்கள் சமய, சந்தர்ப்பம் பார்த்து பொறி தட்டின மாதிரி நினைவுக்கு வர வேண்டும்."* – என்றார் அவர்.

நான் தலையசைத்தேன்.

*"இன்னும் பிந்தவில்லை. இனியாவது சுமந்திரனிட்டை ஒருக்கா கேட்டுப் பதிலைப் போடுங்கோ. அவரின் பதிலை அறிய ஆவலாயிருக்கிறேன். மனுஷன் பொய் சொல்லாது. சில சமயம் சம்பந்தனுக்கும் போட்டுப் பிடிச்சுவிடும். உங்களுக்கும் வலு நல்ல செய்தியாக இருக்கும்."* – என்று கூறி விடைபெற்றுப் புறப்பட்டார் அவர்.

ஸ்ரீமான் பொதுஜனம் மத்தியிலும் எங்களை வென்ற பத்திரிகையாளர்கள் பலர் இலைமறைகாயாக உள்ளனர் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

அவர் கூறியபடி சுமந்திரனிடம் கேட்டு பதில் விரைவில் போடத்தான் வேண்டும்.

- மின்னல் -

### செலவினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டில் அரசசெலவீனமாக 4 ஆயிரத்து 550 பில்லியன் (4 லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாவாக முன்மொழியப்படுகிறது. அரச இறை வருமானமாக 2 ஆயிரத்து 390 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன், கடன் சேவைக்காக 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய் யப்படவுள்ளது என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2 ஆயிரத்து 903 பில்லியன் ரூபா மாத்திரமே அரச செலவீனத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டுக்கு 4 ஆயிரத்து 550 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

மேலும் 2018ஆம் ஆண்டு அரச இறை வருமானமாக 2 ஆயிரத்து 258 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 390 பில்லியன் ரூபாவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு மூலதனம் மற்றும் தேறிய கடன்களுக்கு 751 பில்லியன் ரூபா மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு 2 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (ஐ)

### வெள்ளிக்கிழமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக அமைக்கப்பட்ட வழி நடத்தல் குழு உத்தேச நகல் யாப்புக்கான ஒரு வடிவத்தைத் தயாரித்துள்ள நிலையில் அது பற்றி ஆராய்வதற்காக நாடாளுமன்றம் கடந்த நவம்பர் 07ஆம் திகதி அரசமைப்புப் பேரவையாகக் கூடவிருந்தது தெரிந்ததே.

ஆனால், அதற்கிடையில் ஒக்டோபர் 26ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த அரசியல் சூழ்ச்சியினால், அரசுமாற, அரசமைப்புப் பேரவைக் கூட்டமும் நவம்பர் 7ஆம் திகதி நடைபெறாமல் போயிற்று.

இந்நிலையில் டிசெம்பர் 16ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமரானார். புதிய அரசமைப்புக்கான நகல்வடிவம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு – சுதந்திர தினத்துக்கு – முன்னர் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட பின்னணியில் –

மீண்டும் அரசமைப்பு வழிகாட்டல் குழுவை நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அதன் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க கூட்டியுள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தை அரசமைப்புப் பேரவையாகக் கூட்டவும் –

தற்போது வழிகாட்டல் குழுவில் உத்தேச நகல் யாப்புக்கான வடிவத்தில் உள்ள ஆவணத்தை அரசமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கவும் –

அதை அரசமைப்புப் பேரவை ஆராய்ந்து, அதனை உத்தேச புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நகல் வடிவமாக ஏற்கச் செய்யவும் –

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகின்றது. (உ)

# அதிகாரப் பகிர்வு பற்றி புரியாதோரே புதிய அரசமைப்பை எதிர்க்கின்றனர்



## கூறுகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜன. 08

அதிகாரப் பகிர்வின் முழுமையான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் தான், புதிய அரசமைப்புக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றனர் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்–

அதிகாரத்துக்கு வருவதற்கும், அதனைத் தக்கவைப்பதற்கும் அரசியல்வாதிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டதால் தான் நாடு போருக்குள் இழுத்துச்செல்லப்பட்டது. 1950களில் இருந்து இந்த நிலை தான் காணப்பட்டது.

புதிய அரசமைப்பு வரைவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள், ஒற்றையாட்சி அரசு அல்லது சமஷ்டிஅரசில் அதிகாரப்பகிர்வு பற்றித் தெரியாமல் இருப்பவர்கள் தான்– என்றார். (ஐ)

# மைத்திரி பதவியேற்று இன்றுடன் 4 வருடங்கள்

கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்று நான்கு வருட நிறைவை ஒட்டி பல்வேறு நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.



இலங்கையின் 7 ஆவது ஜனாதிபதியாக மைத்திரிபாலசிறிசேன கடந்த 09.01.2015 அன்று பதவியேற்றுக் கொண்டதையடுத்து இன்றுடன் நான்கு வருடங்கள் நிறைவடைகின்றன.

அதனை முன்னிட்டு ஜனாதிபதிக்கு ஆசி வேண்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரித் பாராயண நிகழ்வு நேற்று இரவு முதல் இன்று அதிகாலை வரை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. (ஐ)

# எம்.பி. ஆவாரா சந்திரிகா?


கொழும்பு, ஜன. 08

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நாடாளுமன்ற உறுப்பினராக்குவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பதவி விலகச் செய்து, அவரின் இடத்துக்கு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நியமிப்பதற்கு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இது தொடர்பில் சந்திரிகா தரப்பிலிருந்து இதுவரை எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.

அதேவேளை, தனது தந்தை உருவாக்கிய ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கு சந்திரிகா ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டார் எனச் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.



கலந்துரையாடல்கள் நடைபெற்றாலும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# ஆளுநர் பதவியை மைத்திரி கொச்சைப்படுத்திவிட்டார்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 081

ஆளுநர் என்ற பதவி ஜனாதிபதியால் கௌரவப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஆளுநர் நியமனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருத்தமில்லாத ஆளுநர்களை நியமித்து ஜனாதிபதி ஆளுநர் பதவியைக் கொச்சைப்படுத்தியுள்ளார்.

ஐந்து மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டனர்.

மாகாண ஆளுநர் நியமனமானது மிகவும் கௌரவமான பதவியாக மதிக்கப்படவேண்டியதொன்றாகும். அந்த நியமனங்கள் நாட்டில் இருக்கும் அரசியல் கட்சி சார்பற்ற கௌரவமான நிலையில் இருப்பவர்களுக்கே வழங்கப்படவேண்டும் – என்றார். (ஐ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை

கொழும்பு, ஜன. 08

வரக்காபொல - தனியார் ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு அருகில் நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர், அவரது சகோதரியின் மகனுடன் மதுபானம் அருந்தி கொண்டிருந்தவேளை இருவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்துமுரண்பாடுபின்னர்கைகலப்பாக மாறியதில், இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், துல்ஹிரிய - பங்களாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த, 59 வயதுடைய நபரெனத் தெரிவித்தப் பொலிஸார் சந்தேகநபர் தப்பி சென்றுள்ளதாகவும் கூறினர். (ஐ)

# வனப்பகுதிகளில் தீப்பரவல்

கொழும்பு, ஜன. 08

மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளில் வரட்சி நிலவி வரும் நிலையில், அங்கு காணப்படும் வனப் பகுதிகளில் சிலர் தீ வைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரொசெல்ல மற்றும் ஹற்றன் ரயில் நிலையத்துக்கருகில் ஸ்டேடன்தோட்ட வனப்பகுதியில், நேற்று முன்தினம் இனந்தெரியாத சிலரால் தீ வைப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதனால் அந்த வனப்பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகி அழிவடைந்துள்ளதோடு, நேற்று அதிகாலையிலேயே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

# சீனக்குடாவில் இருந்து சிங்கப்பூர் பறந்த விமானத்தினால் சர்ச்சை!



கொழும்பு, ஜன. 08

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிலரை ஏற்றி வந்த தனியார் ஜெட் விமானம் ஒன்று திருகோணமலை, சீனக்குடா விமானத் தளத்தில் இருந்து அனுமதியின்றிப் புறப்பட்டுச்சென்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனா,சிங்கப்பூர்,ஹொங்கொங் நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள்சிலர்தனி விமானம் ஒன்றில் கடந்த 03 ஆம் திகதி இலங்கைக்கு வந்திருந்தனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்த விமானம், பின்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் திருகோணமலை, சீனக்குடாவிமானப்படைத்தளத்தில் தரையிறக்கப்பட்டது.

திருகோணமலையில் முதலீடுகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னர், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குழு நேற்று முன்தினம் சீனக்குடா விமானப் படைத் தளத்தில் இருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சீனக்குடா விமானநிலையத்தில் இருந்து சிங்கப்பூருக்குப் பயணமான முதல் விமானம் இதுவாகும்.

அதேவேளை,அனைத்துலக விமானப் போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்படாத விமான நிலையம் ஒன்றில் இருந்து, இந்த விமானம் புறப்பட்டுச்சென்றமைகுறித்து சர்ச்சை எழுந்துள்ளது.

நாட்டின் குடிவரவு, குடியகல்வுச்சட்டம் மற்றும் சிவில் விமான சேவைகள் சட்டம் ஆகியவற்றின்படி வெளிநாட்டு விமானம் அனுமதி பெறாத விமானநிலையம்ஒன்றிலிருந்து நாட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்ல முடியாது.

அதேவேளை, குடிவரவு -குடியகல்வுத்திணைக்களத்தினால் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காகக்கப்பல்களுக்கு வழங்கப்படும் அனுமதியைப் பயன்படுத்தியே இந்த விமானம்புறப்பட்டுச்சென்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் பேச்சு மேசையில் பெண்களுக்கு இடமில்லை!

## ஒஸ்லோ பிரதி மேயர் கருத்து

கொழும்பு, ஜன. 08

விடுதலைப் புலிகளின் பேச்சு மேசையில் பெண்கள் எவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை என்று நோர்வேயின் ஒஸ்லோ மாநகராட்சியின் பிரதி முதல்வரான கம்சாயினி குணரட்னம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகைத் தந்துள்ள அவர் தனியார் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் இதனைக் கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்–

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவானமைக்கு நல்ல காரணம் ஒன்று உள்ளது. அவர்கள் துப்பாக்கி தூக்கியதற்கும் காரணம் உண்டு. ஆனால் இப்போது நாங்கள் போராடும் விதத்தை மாற்ற வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பெண்கள் களத்துக்குச் சென்று போர் புரிந்தனர். விமானம் ஓட்டினர். ஏன் விமானத்தைக் கூடத் திருடினர். ஆனால் பேச்சு நடக்கும்போது அந்த மேசையைச் சுற்றி ஒரு பெண் கூட இல்லை.



ஜனநாயகமாகப் போராடுவதென்றால் ஜனநாயகமாகத்தான் போராட வேண்டும். அந்தப் போராட்டத்தில் எல்லோரும் கலந்து கொள்ளாவிடின் அது போராட்டம் அல்ல. அது ஒரு மக்களுக்கான போராட்டம் அல்ல. ஜனநாயகம் என்பது அனைவருக்கும் சமமான ஒன்று. இவற்றுள் ஆண், பெண் வேறுபாடு என்பது இல்லை – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வடக்கின் புதிய ஆளுநர்

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர் தாயகத்தின் மூளை மையமான வடக்கிற்கு, தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளத்தக்க ஒரு தமிழரை ஆளுநராக நியமியுங்கள் என்று நீண்ட காலமாகக் கோரப்பட்டு வந்தது.

தேசிய இனப்பிரச்சினை ஆயுதம் தாங்கிய உள்நாட்டு யுத்தமாக வெடித்த சூழ்நிலையில் வடக்கின் மாகாண ஆளுநர்களாக முன்னாள் படை அதிகாரிகளே பெரும்பாலும் நியமிக்கப்பட்டு வந்தனர்.

2007 ஜனவரியில் வடமாகாணம் தனியாக்கப்பட்ட பின்னர் அதுதான் நிலைமை. எனினும் கடைசியாக முன்னாள் சிவில் அதிகாரி ஒருவரும், பின்னர் தேர்தல் அரசியலைத் துறந்த முன்னாள் அரசியல்வாதி ஒருவரும் நியமிக்கப்பட்டனர். ஆயினும் அவர்கள் இருவரும் கூட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர்களாகவே இருந்தனர்.

ஆனாலும், கடைசியாகப் பணியாற்றிய முன்னாள் அரசியல்வாதியான சிறிசேன குரே மட்டும் இவர்களில் வித்தியாசமானவராக இருந்தார். தமிழில் சரளமாகப் பேசவல்ல அவர் தம்மைச் சந்திக்கும் வடக்குத் தமிழர்களுடன் உள்ளத்தைத் தொடும் வகையில் உரையாடினார்; ஊடாடினார்.

இப்போது அவர் நீக்கப்பட்டு புதியவர் – முதல் தடவையாக தமிழர் – நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

தமது ஜனாதிபதி பதவித் தரத்துக்குரிய ஜனாதிபதியின் செயலாளர், தனக்குக் கீழ் இருக்கும் முக்கிய அமைச்சான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தாம் தலைமை வகிக்கும் சுதந்திரக் கட்சியின் செயலாளர் போன்ற பதவி நிலைகளில் தாம் ஜனாதிபதியாகி இந்த நான்கு வருடங்களுக்குள் பலரை மாற்றி மாற்றி நியமித்து எப்படி அவர்களைப் பந்தாடினார் ஜனாதிபதி மைத்திரிபால என்பதை இப்பத்தியில் நேற்று விலாவாரியாகப் பெயர் விவரங்களுடன் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அந்த வரிசையில் இப்போது வடக்கு மாகாண ஆளுநரும் மாற்றப்பட்டிருக்கின்றார். மைத்திரி ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் இப்போது பதவியேற்றவர் நான்காவது ஆளுநர்.

மைத்திரி ஜனாதிபதியான சமயத்தில் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி. மூன்று வார காலத்தில் முன்னாள் மூத்த சிவில் அதிகாரியான எச்.எம்.ஜி.எஸ்.பளிகக்கார. மீண்டும் ஒரு வருடத்தில் மாற்றம். ரெஜினோல்ட் குரே பதவியேற்றார். மூன்று வருடங்கள் முடிவதற்குள் இடையில் அவரும் வீட்டுக்கு அனுப்பப்பட இப்போது கலாநிதி சுரேன் ராகவன் பொறுப்பேற்கின்றார். ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆலோசகராகவும், அண்மையில் குறுகிய காலம் ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பணிப்பாளராகவும் கடமையாற்றியவர் இவர்.

வடக்குக்கு ஒரு தமிழரை ஆளுநராக நியமியுங்கள் என்ற நீண்ட கால கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

ஆனால் சுரேன் ராகவனின் நியமனம் வடக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை – ஒட்டுமொத்த தமிழினத்தைப் பொறுத்தவரை – அதன் நலனுக்கு உகந்த ஓர் ஆக்கபூர்வமான விடயமாக ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்ற கேள்வி எழுமானால், பின்னடிக்கும் போக்கிலேயே அதற்குப் பதில் கிடைக்கும் என்பதுதான் யதார்த்தம்.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பில் ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்தக் கட்டத்தில் வடக்கு ஆளுநராக நியமிக்கப்படும் இந்தத் தமிழர் யார், இவரை மைத்திரிபால சிறிசேன இதுவரை காலமும் தமது ஆலோசகராகவும், ஊடகப் பணிப்பாளராகவும் ஏன் அரவணைத்திருந்தார் என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் வொல்ஸன் கல்லூரியின் பௌத்த கற்கை மையத்தில் ஆய்வுப் பணியில் ஈடுபட்ட ஒரு கல்விமான். பௌத்த மதம் மற்றும் இலங்கையில் சமாதானத்தை உருவாக்குதல் பற்றி பல விடயங்களை ஆழமாக ஆராய்ந்தவர்.

பௌத்தத்தோடும், பௌத்த மகா சங்கத்தோடும் அதிக தொடர்பு கொண்ட கலாநிதி சுரேன் ராகவன் மூன்று முக்கிய புத்தங்களை எழுதியுள்ளார். அதில் ஒன்று சிங்களத் தேசியவாதியான வண.ராகுல வல்பொலவின் அரசியலை விதந்துரைப்பது.

இன்னொன்று இரண்டு ஆணடுகளுக்கு முன்னர் வெளியான ஆய்வு நூல். *“பௌத்த பிக்குகளும் இலங்கையின் சிவில் யுத்த அரசியலும்; சிங்கள மகாசங்கத்தின் இனமத முதன்மைத் தேசியவாதமும் இலங்கையில் சமாதானத்தை உருவாக்குதலும்”* – என்பதுதான் அந்த நூலின் தலைப்பு.

சமஷ்டி, பல்தேசியம் போன்றவற்றை சமாதானத்துக்கான மார்க்கமாக நோக்கும் மேற்கத்திய சிந்தனைகளின் மட்டுப்படுததல்களை விரிவாக ஆராயும் இந்த நூல், சிங்கள பௌத்தத்தின் உலகத் தரிசனமாக மூன்று சங்க சபாக்கள் விளங்குகின்றமையை விவரிக்கின்றது.

சுருக்கமாகக் கூறுவதானால், மேற்கத்திய பாணி சமஷ்டி போன்ற அணுகுமுறைகளைக் கைவிட்டு, பௌத்த மகா சங்கத்தைத் தீர்வு முயற்சியில் நேரடியாக இணைப்பதன் மூலம் – பங்காளிகளாக்குவதன் வாயிலாக – மட்டுமே இணக்கமும், புரிந்துணர்வும், தீர்வும் சாத்தியம் என்பதை சுற்றிவளைத்து கூற வருகின்றது இந்த நூல்.

இந்தப் பின்புலத்தில் வடக்கு மாகாண ஆளுநராக சுரேன் ராகவன் நியமிக்கப்பட்டமை புரிந்து கொள்ளத்தக்கதே.

இந்நியமனம், தமிழரின் அரசியல் தலைமைகளுக்குச் சொல்லும் செய்தியும் புரிந்து கொள்ளக்கூடியதே.

# சு.கவில் விரிசல் கிடையாது

## கூறுகிறார் சாந்த பண்டார

கொழும்பு, ஜன. 08

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் எந்தவொரு விரிசலும் இல்லையென்று அந்தக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சிக்குள் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால் அதைக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்ப்பார்கள். எதிர்காலத் தேர்தலுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து கூட்டமைப்பைக் கட்டியெழுப்புவர்.



அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு கட்சியுடன் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவர் அதனைத் தீர்த்த பின்னர் மீண்டும் கட்சியுடன் இணைந்துக் கொள்ளவேண்டும் – என்றார். (ஐ)

# யாழ்பல்கலைக்கழக 40 ஆவது ஆண்டு நிறைவில் சிறந்த ஆய்வுகூட விரிவுரையாளராக சிவானந்தம்!




யாழ்.பல்கலைக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விரிவுரையாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மருத்துவ பீடத்துக்கு ஆற்றிய சேவையை விதந்து கௌரவிக்கப்பட்ட விழாவில் யாழ்.பல்கலைக் கழகத்தில் 10 வருடங்களுக்கு மேல் மருத்துவ பீட மாணவர்களுக்கு ஆய்வுகூட தொழில்நுட்பம் தொடர்பாக விரிவுரையாற்றிய தெல்லியூர் கதிரவேல்பிள்ளை சிவானந்தம் கௌரவிக்கப்பட்டார். இவருக்குரிய கௌரவத்தை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்திய கலாநிதி ந.இரவிராஜ் வழங்கினார்.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்ட க.சிவானந்தம், தெல்லிப்பழை பிரபல பல்வைத்திய நிபுணர் காலஞ்சென்ற வ.கதிரவேல்பிள்ளை மாமாங்கம் தம்பதிகளின் புதல்வராவார். இவர் பன்னாலையில் துர்க்கா ஆய்வுகூட சேவையின் நிர்வாக இயக்குநரும் ஆவார்.

2013 ஆம் ஆண்டு நிறைவு காண் மருத்துவவியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்றியம் நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில் உள்ள ஞானம்ஸ் உணவகத்தில் நடைபெற்றது. இதில் பெறுமதிமிக்க சேவையை மண்ணுக்கு ஆற்றிய ஐந்து தொழில்நுட்பவியலாளர்களை அந்த அமைப்பு கௌரவித்தது. அதில் ஆய்வுகூட மருத்துவ தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவையில் பொன்விழாவைக் கண்ட தெல்லியூர் க.சிவானந்தத்துக்கு சிறப்புக் கௌரவம் கிடைக்கப்பெற்றது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஸ்ரீலங்கா நோயியல் வைத்திய கல்லூரி கொழும்பு வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் நடத்திய அகில இலங்கை பல்கலைக்கழகத்தில் அதிசிறந்த சேவையாற்றிய 10 தொழில்நுட்பவியலாளர்களில் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தராகவும் அகில இலங்கை சுகாதாரத் திணைக்களத்தில் 7 வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களில் 4 தமிழ் உத்தியோகத்தர்களில் வடமாகாணத்தில் இருந்து அழைக்கப்பட்ட ஒரேயொரு தமிழ் உத்தியாகத்தராகவும் க.சிவானந்தம் கௌரவம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 3,850 விளையாட்டுப் பயிற்றுநர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர்

கொழும்பு, ஜன. 08

அரச பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் 3,850 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவியளிப்பு



முல்லைத்தீவு, ஜன. 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவால் வழங்கப்பட்டன.

இலண்டன் சிவன் கோவில் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவின் வழிகாட்டலில் ஒளிரும் வாழ்வு அமைப்பினால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வள்ளிபுனம் இடைக்கட்டுப் பகுதியில் வைத்து மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா வழங்கினார். (ஐ)

## நாளை

09.01.2019
புதன்கிழமை

நட்சத்திரம் : அவிட்டம் பி.இ 1.49 வரை
திதி : திருதியை பி.ப 1.38 வரை
சுபநேரம் : 5.02 - 6.32 வரை
இராகுகாலம் : 12.32 - 2.02 வரை

# 27 கோடி செலவில் வடக்கில் இறங்குதுறைகள் புனரமைப்பு

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் சிவஞானசோதி தகவல்

கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவின் வழிகாட்டலில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக உயர் பெறுபேறுகளை வழங் கக்கூடிய வாழ்வாதாரத்தை மேம்படுத்து கின்ற உட்கட்டமைப்புக் கருத்திட்டங் களான மீன்பிடி இறங்குதுறைகளும் நங்கூரமிடும் தளங்களும் யாழ். மாவட் டத்தில் மேம்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட் டுள்ளன.

தெல்லிப்பளையில் பலாலி வடக்கு இறங்குதுறையும், ஊரணி இறங்கு துறையும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலிஇறங்குதுறையும், பருத் தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் பொலிகண்டி இறங்குதுறையும் 27 கோடி ரூபாவில் மேம்படுத்தப்பட்டு கடற்தொழி லாளர்களின் பாவனைக்காகக் கைய ளிக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் 1280 கடற்தொழிலாளர் குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனத் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர் வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச் சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதிப்படுத்தலின் கீழ் யாழ். மாவட் டத்தில் பருத்தித்துறையிலும், மன்னார் மாவட்டத்தில் பேசாலையிலும் இரண்டு பாரிய மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கான வடிவமைப்பு வேலை கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. இவை தவிர யாழ். மாவட்டத்தில் மண்டைதீவில் நங்கூரமிடும்தளமும், முனை, ஆதிகோவி லடி, தலைத்துறை, துறையூர், புங்குடு தீவு, அராலித்துறை, சாம்பலோடை, காக் கைதீவு இறங்குதுறைகளும்,

மன்னார் மாவட்டத்தில் கொண்டைகச் சிகுடா, அரிப்பு, மீனப்பாடு, சிறுதோப்பு, வங்காலை, தலைமன்னார் இறங்குதுறை களும், கிளிநொச்சி மாவட்டத்தில் நாச் சிக்குடா, வாழைப்பாடு, பள்ளிகுடா இறங்கு துறைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இரணைப்பாலை, சிலாவத்துறை, தீர்த் தக்கரை, கள்ளப்பாடு தெற்கு, கள்ளப் பாடு வடக்கு, கொக்கிளாய் இறங்குதுறை களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்கான மொத்தச் செலவு 201 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்க ளாகும்.

இக்கருத்திட்டமானது வடக்கு மாகாண மீன்பிடித்துறையை பொருளாதார ரீதி யில் மேம்படுத்துவதற்கு பாரிய பங்க ளிப்பை செய்யும் என அமைச்சின் செய லாளர் வே.சிவஞானசோதி தெரிவி தார்.

மேலும் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் 4 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் மூன்றுமாடி கட்டட நிர்மா ணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்செயற்பாடுகள் வடமாகாண அபிவி ருத்தியில் முக்கியமான மைல்கற்களாக அமைவதாக வே.சிவஞானசோதி மேலும் கூறினார். (ஐ)

# பாடசாலைக்கு ஆண் அதிபரை நியமிக்கக் கோரிப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 08

மட்டுவில் தெற்கு அமெரிக்க மின் தமிழ்க் கலவன் பாடசாலைச் சமூகம் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

பாடசாலையில் இருந்த அதிபர் வேறு பாடசாலைக்கு இடம்மாறிச் சென்ற பின்னர் அந்த வெற்றிடத்துக்குப் பெண் அதிபர் ஒருவரை நியமிக்கக் கல்வித் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் கவனவீர்ப் புப் போராட்டம் இடம்பெற்றது.

பாடசாலையில் இருக்கும் ஆசிரியர்கள் பெண்களாக உள்ளமையால், நியமிக்கப் படவுள்ள அதிபரை ஆண் ஒருவராக நியமிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பேராட்டத்தில், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ - 07)

# கைதாவார் நாமல் குமார



கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்க ளைப் படுகொலை செய்யும் சதித்திட் டம் தொடர்பான தகவல்களை வெளி யிட்டுப் பரபரப்பை ஏற்படுத்திய நாமல் குமார, இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்படவுள்ளார்.

நாமல் குமார 2009ஆம் ஆண்டு விமானப்படையில் இணைந்து கொண்டு பயிற்சியின்போது தப்பிச் சென்றவர் என்றும், பின்னர் 2011ஆம் ஆண்டில் இராணுவத்தில் இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த போது தப்பிச் சென்றார் என்றும் குற் றப் புலனாய்வுப் பிரிவினர் கோட்டை நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தி ருந்தனர்.

அத்துடன், இராணுவத்தில் இணைந்து கொண்டபோது அவர் சமர்ப்பித்த கல்விச் சான்றிதழ்கள் போலியானவை என்றும் அந்த அறிக் கையில் கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்கள் மீது எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கை நாமல் குமாரவுக்கு எதிராகவும் மேற் கொள்ளப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்த பத்து தெரிவித்துள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுப் பிரி வினர் அவருக்கு எதிராக நடத்தி வரும் விசாரணைகள் நிறைவடைந்த பின் னர், இராணுவ விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டு அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கிழக்கு ஆளுநர் நியமனம் இனவாதத்தை தூண்டும்

## வடக்கு அவைத் தலைவர் காட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 08

மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ள ஆளு நர் நியமனமானது இனவாதத்தை வளர்க்கும் என வடக்கு மாகாண அவைத் தலைவரும் இலங்கை தமி ழரசுக் கட்சியின் துணைத் தலை வருமான சீ.வி.கே.சிவஞானம் தெரி வித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் நிய மனம் தொடர்பாகக் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இதனைக் கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இனக்குரோதமுடையவர் எனத் தன்னை அடையாளப்படுத்திய ஒருவரை ஆளுநராக நியமித்திருப் பது இன ஐக்கியத்திற்கு வித்திடாது. இந்தச் செயற்பாடு இனக்குரோதத்தை வளர்க்கும் செயற்பாடாகவே பார்க் கப்படும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் சிங்கள மொழி பேசும் ஆளுநரே நியமிக்கப்பட்டுள் ளார். ஆனால் தற்போது தமிழ் பேசும் முஸ்லிம் ஒருவர் ஆளுநராக நியமிக் கப்பட்டுள்ளார். அது வரவேற்கத்தக் கது.

ஆளுநரை நியமிப்பதென்பது ஜனாதிபதியின் அதிகாரம். அது அவ ரின் உரிமை. கிழக்கு மாகாணம் மூவின மக்களும் வாழும் ஒரு மாகா ணம். இனக் குரோதம் உடையவர் எனத் தன்னை அடையாளம் காட்டிய ஒருவரை அங்கு ஆளுநராக நியமிப் பது இன ஐக்கியத்துக்கு வித்திடுவ தாக இருக்காது.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஹிஸ்புல்லாஹ் வடக்குகிழக்கு மாகாணங்கள் இணைக் கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் எனக் கடந்த காலங்களில் கருத்து தெரிவித் திருந்தார்.

வடக்கு மாகாணத்துக்கென நியமிக்கும் ஆளுநர் மாகாணத்தின் நிர்வாகம் தொடர்பாகத் தெரிந்து கொண்டவராகவும் தமிழ் மக்களோ டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டனும் ஒத்துழைத்துச் செயற்படக் கூடியவராகவும் இருக்கவேண்டும் – என்றார். (ஐ)

# நாட்டில் சகலருக்கும் சமமான அபிவிருத்தி

## அமைச்சர் மங்கள கூறுகிறார்



கொழும்பு, ஜன. 08

அரசு அனைவருக்கும் சமமான அபி விருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங் கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை நூபே பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

வீதி விபத்துக்களால் தாய் அல்லது தந் தையை இழந்த குடும்பங்களின் பிள்ளைக ளுக்குப் புலமைப்பரிசில் வழங்குவதற்காக இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந் தது. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஒழுங்கு செய்துள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம் நேற்றுமுன்தினம் முதல் நாடு பூராகவும் செயற் படுத்தப் பட்டுள்ளதுடன் நேற்றுமுன்தினம் 14 சிறுவர்களுக்கு புலமைப்பரிசில் வழங் கப்பட்ட டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 3 மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களை உயர்நீதிமன்றுக்கு நியமிக்க நேற்று ஒப்புதல்

கொழும்பு, ஜன. 08

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பிரீத்தி பத் மன் சூரசேன, எஸ்.துரைராஜா, ஈ.ஏ.ஜி.ஆர். அமரசேகர ஆகிய மூவரையும் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசமைப்புச் சபை பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்மொழி யப்பட்ட நான்கு நீதியரசர்களின் பெயர்களிலிருந்து இவர்கள் மூவரையும் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க அரசமைப்புச் சபை நேற்று ஒப்புதல் வழங்கி யது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் அரசமைப் புச் சபை நேற்றுக் கூடியது.

இதேவேளை, மேல்நீதிமன்ற நீதிபதியை மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங் கவும் அரசமைப்புச் சபை ஒப்புதலளித்தது. (ஐ)

# லொறியுடன் மோதி அப்பளம் போல நொறுங்கியது வான்; 10 பேர் சாவு!

## ஐயப்ப பக்தர்களுக்கு நேர்ந்த கதி; புதுக்கோட்டையில் விபரீதம்

புதுக்கோட்டை,ஜன.08

புதுக்கோட்டை அருகே வானும், டிரெய்லர் லொறியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், ஐயப்ப பக்தர்கள் 9 பேர் உள்பட 10 பேர் பலியானார்கள். அவர்கள் இராமேஸ்வரம் கோவிலுக்குச் சென்று விட்டு ஊர் திரும்பிய போது இந்தப் பரிதாப சம்பவம் நடந்தது.

தெலுங்கானா மாநிலம் மேடக் மாவட்டம் காஜிபேட் கிராமத்தைச் சேர்ந்த 14 பேர் மாலை அணிந்து விரதம் இருந்து, கேரள மாநிலம் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வானில் பக்தி சுற்றுலா சென்றனர்.

வானை அதே பகுதியை சேர்ந்த சாரதி ஒருவர் செலுத்தி வந்தார். அவர் மாலை அணிந்து விரதம் மேற்கொள்ளவில்லை.



ஐயப்பன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்த பின், தமிழகம் வந்து கோவில்களில் சாமி தரிசனம் செய்தனர்.

இராமேஸ்வரம் கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்துவிட்டுஅங்கிருந்துசொந்த ஊர் செல்வதற்காக நேற்று முன்தினம் பகலில் வானில் புறப்பட்டனர். வான் மதியம் 2.15 மணி அளவில் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் கோட்டை அருகே காரைக்குடி-திருச்சி தேசியநெடுஞ்சாலையில்வந்து கொண்டிருந்தது.

அப்போதுபுதுக்கோட்டையில் இருந்து காரைக்குடி நோக்கி ஒரு டிரெய்லர் லொறி வேகமாகச்சென்றுகொண்டிருந்தது. அந்த டிரெய்லர் லொறியும் வானும் திடீரென்று நேருக்கு நேர் பயங்கரமாக மோதிக் கொண்டன.

விபத்துநடந்ததும்லொறியை நிறுத்தி விட்டு அதன் சாரதி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

இந்த விபத்தில் வான் அப்பளம்போல்நொறுங்கியது. அதில் இருந்த நாகராஜ் (வயது 35), மகேஷ் (28), குமார் (22), ராம் (22), பிரவீண் (24), கிருஷ்ணா (35) மற்றும் வான் சாரதி ஆகிய 7 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் பலியானார்கள். சாரதி பெயர் விவரம் தெரியவில்லை.

மேலும் 8 பேர் படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடியபடி அபய குரல் எழுப்பினர். இந்த விபத்தை கண்ட அப்பகுதி பொதுமக்கள் விரைந்து வந்தனர். மேலும் விபத்து குறித்து தகவல் அறிந்ததும் திருமயம் பொலிஸார் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக திருமயம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே சாய் (22), சுரேஷ் (25),ஆஞ்சநேயலு ஆகிய 3 பேர் பரிதாபமாக உயிர் இழந்தனர்.

இதனால்பலியானவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது.

(அ)

## திருவாரூர் இடைத்தேர்தல் திடீரென ரத்து!

திருவாரூர் தொகுதிக்கு இடைத்தேர்தல் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெற இருந்த நிலையில், அந்த இடைத்தேர்தலை ரத்து செய்து தேர்தல் ஆணையம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இடைத்தேர்தல் பணிகளை நிறுத்திவைக்கவும் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அந்த சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்த கருணாநித. கடந்த ஆண்டு ஓகஸ்டு மாதம் 7ஆம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக மரணம் அடைந்தார். இதைத் தொடர்ந்து திருவாரூர் தொகுதி காலி இடமாக அறிவிக்கப்பட்டது. சட்ட விதிகளின்படி திருவாரூர் தொகுதியில் பிப்ரவரி 5 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதால் தலைமை தேர்தல் ஆணையம் இதுபற்றி ஆலோசித்து வந்தது.

தமிழ்நாட்டில் திருவாரூர் தொகுதி தவிர திருப்பரங்குன்றம் மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 எம்.எல்.ஏ.க்களின் தொகுதிகளும் காலியாக இருப்பதால் 20 தொகுதிகளுக்கும் ஒரே நேரத்தில் இடைத்தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திருப்பரங்குன்றம் தொகுதி தொடர்பான வழக்கு நீதிமன்றில் இருப்பதாலும், தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்ய அவகாசம் இருப்பதாலும் அந்த 19 தொகுதிகளின் தேர்தலை சற்று தாமதித்து நடத்தலாம் என்று தலைமை தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.

இதையடுத்து திருவாரூர் தொகுதிக்கு மட்டும் இடைத்தேர்தல் திகதியை தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது. அதன்படி வருகிற 28 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற இருந்த நிலையில், திருவாரூர் தொகுதியில் இடைத்தேர்தல் பணிகளை நிறுத்திவைக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

கஜா புயல் நிவாரணப் பணிகள் முடியாதமையால் திருவாரூரில் தேர்தலை ஒத்திவைக்க கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

திருவாரூர் தேர்தலுக்கு எதிரான மனுக்கள் நேற்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவிருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கன்னடத் திரைப்படத் துறையினரிடம் வருமான வரித்துறை அதிரடி பாய்ச்சல்

### கணக்கில் வராத ரூ.109 கோடி சொத்துச் சிக்கியது

கன்னடத் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களிடம் கடந்த 4 நாள்களாக வருமானவரித்துறையினர்நடத்தியசோதனையில்கணக்கில் வராத ரூ.109 கோடி சிக்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கன்னடத் திரைப்படத்துறையில் உள்ள பல்வேறு தயாரிப்பாளர்கள், நடிகர் வீடுகளில் கடந்த வியாழக்கிழமை முதல் வருமானவரித்துறையினர் திடீரென சோதனை நடத்தினார்கள். இந்தச் சோதனை வியாழக்கிழமை தொடங்கி, நேற்று வரை நடந்தது.

இந்தச் சோதனையில் தயாரிப்பு நிறுவனங்கள், தயாரிப்பாளர்கள், திரைப்பட நித. உதவியாளர்கள், நடிகர்கள் ஆகியோரின் வீடுகள், அலுவலகங்களில் சோதனை நடந்தது.



பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கப்பணம்

இந்தச் சோதனையில் கணக்கில் வராத ரூ.11 கோடி சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன, ரூ.2.85 கோடிக்கு ரொக்கப்பணம், 25.3 கிலோ தங்க நகைகள், ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு ரூ.109 கோடி என்று வருமானவரித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வருமான வரித்துறையினர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 4 நாள்களாகக் கன்னட திரைப்படத்துறையில் தயாரிப்பாளர்கள், நிதியாளர்கள், நடிகர்கள் வீடுகள், அலுவலகங்களில் நடந்த வருமானவரித்துறைச் சோதனை நிறைவடைந்தது. இதில் கணக்கில் வராத பணம், சொத்துக்கள், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கணக்கில் வராத திரையரங்கு வசூல், வருமானமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டவர்களுக்கு நோட்டீஸ்அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபரிமலை ஐயப்பன் விவகாரத்தால் கேரளாவில் தொடர்கிறது வன்முறை



சபரிமலை விவகாரத்தில் கேரளாவில் வன்முறைச் சம்பவங்கள் நீடிப்பதால் மாநிலத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவுகின்றது.

மாவட்டம் முழுவதும் தொடர்வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனால் தலசேரி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று நள்ளிரவு வரை பொலிஸார் '144' தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்நிலையில், அரசியல் தலைவர்களின் வீடு மற்றும் கட்சி அலுவலகங்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

போராட்டக்காரர்களால் அந்தப் பகுதிகளில் வெடிகுண்டு வீசப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கல்வீச்சு நடத்தியுள்ளனர். இதன்காரணமாக அப்பகுதிகளில் 2 பெண்கள் காயமடைந்துள்ளதுடன் பொருட்கள் மற்றும் வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

இதேபோன்று, மாநிலத்தின் பல பகுதிகளிலும் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், அதனால் அந்த பகுதிகளில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கேரளாவில் நாத்திகத்தை பரப்ப இடதுசாரி அரசு திட்டமிட்டு செயற்படுவதாக நாயர் சேவை சமூகம் (என்.எஸ்.எஸ்.) குற்றஞ்சுமத்தியுள்ளது.

கேரளாவில் புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலில் பலத்த எதிர்ப்பு மற்றும் போராட்டங்களுக்கு மத்தியில் 50 வயதுக்கு உட்பட்ட இரு பெண்கள் கடந்த 2ஆம் திகதி தரிசனம் செய்ததையடுத்து, மாநிலம் முழுவதும் போராட்டமும் வன்முறைச்சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

(ஐ)

# இரட்டைத் தட்டு பஸ் கவிழ்ந்ததில் தாய்லாந்தில் ஆறு பயணிகள் சாவு



பாங்கொக், ஜன.08

தாய்லாந்தில் இரட்டைத் தட்டு பஸ் கவிழ்ந்த விபத்தில் 6 பேர் பலியாயினர்.

தாய்லாந்து நாட்டின் ரோய் இட் மாகாணத்தில் உள்ள பனோம் பிராய் மாவட்டத்தில் இருந்து தலைநகர் பாங்கொக்குக்கு இரட்டைத் தட்டு பஸ் சென்றுகொண்டிருந்தது. இந்த பஸ்ஸில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

இந்த பஸ் கோலோங் லுவாங் மாவட்டத்தில் உள்ள ஒரு சாலையில் சென்றுகொண்டிருந்த போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடியது. பின்னர் அந்த பஸ் சாலையில் கவிழ்ந்தது.

இந்தக் கோர விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். மேலும் 50 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

## தங்கச் சுரங்கம் சரிந்ததில் ஆப்கானில் 30பேர் சாவு



காபூல், ஜன.08

ஆப்கானிஸ்தானில் தங்கச் சுரங்கம் சரிந்து விழுந்து விபத்திற்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ளது படாக்ஷான் என்ற மாகாணம். இங்குள்ள கோஹிஸ்தான் மாவட்டத்தில் உள்ள ஆற்றுப்படுகையில் பூமிக்கு அடியில் தங்கம் கிடைப்பதாக அங்குள்ள உள்ளூர்வாசிகள் நம்புகின்றனர்.

தங்கம் கிடைப்பதாக நம்பிய உள்ளூர்வாசிகள் அரசின் உரிய அனுமதி பெறாமல் அவர்களாகவே சொந்தமாக சுரங்கம் வெட்டித் தங்கம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அவ்வாறு தோண்டப்பட்ட சுமார் 200 அடி ஆழ சுரங்கத்திற்குள் சிலர் வேலை செய்து கொண்டிருக்கும் போது எதிர்பாராதவிதமாக சுரங்கம் திடீரென்று உள்பக்கமாக மளமளவென சரிந்து விழுந்தது.

இது குறித்து தகவல் அறிந்ததும் வந்த மீட்பு குழுவினர் மற்றும் பொலிஸார் சுரங்கத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து அங்கு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மருத்துவ உதவிக்குழுவும் அங்கு முகாமிட்டுள்ளது.

மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே உள்ளூர் மக்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டிருந்த 30 பேரின் உடல்களை மீட்டனர். 15 பேர் காயமடைந்தனர்.

# பிரான்ஸில் தீவிரமடைகிறது மஞ்சள் அங்கிப் போராட்டம்

## திரும்பவும் பல இடங்களில் வன்முறை

பாரிஸ், ஜன.08

பிரான்ஸில் மஞ்சள் அங்கிப் போராட்டம் மீண்டும் வலுப்பெற்றது. பல இடங்களில் வன்முறை வெடித்தது.

பிரான்ஸ் நாட்டில், சுற்றுச்சூழலைக்காரணம் காட்டி பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரியை அரசு உயர்த்தியது. இதனை எதிர்த்து வாகனச்சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்களுடன் பொது மக்களும் கைகோர்த்ததால் இந்தப் போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது.

பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரி உயர்வைக் கண்டித்து தொடங்கிய போராட்டம், அரசின் பல்வேறு கொள்கைகளுக்கு எதிராகவும் திரும்பியதால் பெருந்திரளான மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.



வாகனச் சாரதிகள் அணியும் மஞ்சள்நிற அங்கிகளை அணிந்துகொண்டு மக்கள் போராட்டம் நடத்தியமையால் இது மஞ்சள் புரட்சி என்றும், மஞ்சள் அங்கிப் போராட்டம் என்றும் அழைக்கப்பட்டது.

ஒவ்வொரு வாரத்தின் இறுதிநாள்களிலும் நடந்த இந்த போராட்டம் தலைநகர் பாரிஸை ஸ்தம்பிக்க வைத்தது. அதே சமயம் இந்த போராட்டத்தில் பல முறை வன்முறையும் வெடித்தது. இதில் 10 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

மக்களின் இந்த ஓயாத போராட்டம் அதிபர் மெக்ரானின் அரசுக்குப் பெரும் தலைவலியாக அமைந்தது. இதையடுத்து போராட்டத்துக்கு அரசு பணிந்தது. பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தொடர்ந்து 5 வாரங்களாக நடந்து வந்த மஞ்சள் அங்கி போராட்டத்தின் தீவிரம் சற்று குறைந்தது. எனினும் அதிபர் மெக்ரான் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் தொடர்ந்தது.

பாரீஸ் உள்பட பிற நகரங்களில் நடந்த போராட்டங்களில் குறைந்த அளவிலான மக்கள் மட்டும் பங்கேற்றனர். அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றமையால் வன்முறைச் சம்பவங்கள் ஏதும் நிகழவில்லை.

இந்த நிலையில் 8 ஆவது வார மாக சனியன்று நடந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டமையால் மஞ்சள் அங்கி போராட்டம் மீண்டும் வலுப்பெற்றது. மேலும் இந்த போராட்டத்தின்போது பல இடங்களில் வன்முறையும் வெடித்தது.

பாரிஸில் செயின்ட் ஜெர்மைன் என்கிற இடத்தில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் தங்கள் கண்ணில் பட்ட பொருள்களுக்குத் தீ வைத்தனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் உருவானது.

அதேபோல், செயின் ஆற்றங்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் குவிந்த போராட்டக்காரர்கள் படகுகளுக்கும், சாலையில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார்களுக்கும் தீ வைத்தனர். இதையடுத்து வன்முறையை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, அவர்களை விரட்டி அடித்தனர்.

இந்த நிலையில் மஞ்சள் அங்கி போராட்டத்தின் போது வன்முறை ஏற்பட்டதற்கு அதிபர் மெக்ரான் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும் அவர் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் போராட்டத்தை கைவிட்டுவிட்டு ஆலோசனை மற்றும் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

(அ)

# பிலிப்பைன்ஸை வதைக்கின்றது பேய்மழை! அனர்த்தங்களில் இதுவரை 126 பேர் பலி

பிலிப்பைன்ஸில் புயல் தாக்குதல் காரணமாக பலியானோர் எண்ணிக்கை தற்போது 126 ஆக உயர்ந்துள்ளது.

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களில் கடந்த மாதம் 29 ஆம் திகதி பயங்கரப் புயல் தாக்கியது. அதனைத் தொடர்ந்து இடைவிடாமல் கொட்டி தீர்த்த கனமழையால் ஊர்களுக்குள் வெள்ளம் புகுந்து ஆயிரக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கின.

மேலும் பல இடங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டதில் வீடுகள் மண்ணோடு மண்ணாகப் புதைந்தன. மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு தொடர்பான சம்பவங்களில் 68 பேர் பலியாகினர் என முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில் பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களில் தொடர்ந்து கனமழை கொட்டி வருகிறது. இதனால் மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாமல் தவித்து வருகிறார்கள்.



இயற்கையின் இந்த ருத்ர தாண்டவத்தால் சுமார் 7 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு இருப்பதாக பேரழிவு மேலாண்மைத் துறையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.


இதற்கிடையே வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 126- ஐ எட்டியது. மேலும் 26 பேரைக் காணவில்லை. அவர்களின் கதி என்ன என்பது தெரியாததால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

# இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

ஜகார்த்தா, ஜன.08

இந்தோனேசியாவின் கடற்கரை பகுதியில் நேற்று அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.6 ஆகப் பதிவானது. மொலுக்கா கடலுக்கடியில் சுமார் 40 மைல் தொலைவில் மையம் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கின. பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்பட்டதா? என்பது குறித்து எந்த தகவலும் உடனடியாகக் கிடைக்கவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.



டிசெம்பர் மாத இறுதியில் சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் இந்தோனேசியா கடும் பாதிப்புக்குள்ளானது. சுமார் 400 பேர் சுனாமிக்குப் பலியாகி இருந்தனர். இந்தப் பாதிப்புகளில் இருந்து முழுமையாக இன்னும் இந்தோனேசியா மீளாத நிலையில், மீண்டும் தற்போது நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

# அரசியல் தீர்வு குறித்து தமிழரின் நம்பிக்கைகளை தகர்த்துவிடாதீர்!

உரிமைகளுக்கான மூன்று தசாப்த கால ஆயுதப் போராட்டம் மிலேச்சத்தனமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் கோடானு கோடி ரூபா மதிப்பிலான உடைமைகளையும் இழந்து நிற்கும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை அருகிக்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் அரசியல் தீர்வுக்கான அடித்தளமாக பார்க்கப்படும் புதிய அரசமைப்பு விரைவில் சமர்பிக்கப்படும் என்ற செய்தி, அனைத்தும் வீணாய்ப் போய்விடவில்லை என்ற உணர்வைத் தந்துள்ளதோடு ஒரு வகையான எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் நெருக்கடிக்குப் பின்னர் மீண்டும் பிரதமராகிய ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது பிரிக்கப்படாத நாட்டிற்குள் தமிழர்களுக்கான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கு குறிப்பாக புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு தம்மாலான இயன்ற நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்பாக புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என சில நாள்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்.

இந்நிலையில், தேசியப் பிரச்சி



னைக்கு அரசியல் தீர்வை வழங்கக் கூடிய உத்தேச அரசமைப்பு எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும் என நாடாளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்திருக்கின்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் முக்கியஸ்தர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அமைச்சர் கிரியெல்லவின் இந்த அறிவிப்புகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன. பல தசாப்தங்களாக நீடித்து வரும் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் இந்நாட்டை உண்மையாகவே நேசிக்கும் எல்லாத் தரப்பினரதும் விருப்பமும் எதிர்பார்ப்புமாகும். இருந்தபோதிலும் சந்தர்ப்பவாத அரசியல் காரணமாக இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படாமல் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

இதன் விளைவாக இந்த நாடு சுமார் மூன்று தசாப்த கால உள்நாட்டு யுத்தத்துக்கும் முகம்கொடுத்தது. அதனால் இந்நாடு விலைமதிக்க முடியாத உயிரிழப்புகளை சந்தித்ததோடு, கோடிக்கணக்கான பெறுமதிமிக்க அழிவுகளுக்கும் முகம்கொடுத்தது. இதனால் இந்நாடு பொருளாதார அபிவிருத்தியிலும் பல தசாப்தங்கள் பின்தள்ளப்பட்டுள்ளது.

இந்த யுத்தம் முடிவுக்கு வந்து சுமார் 10 வருடங்களாகியும் இந்த யுத்தத்துக்கும் அதன் விளைவான அழிவுகளுக்கும் மூல காரணமாக அமைந்த தேசியப் பிரச்சினைக்கு இற்றைவரையும் அரசியல் ரீதியாக தீர்வு காணப்படாதுள்ளது.

இந்நிலைமை இனியும் நீடிக்கக் கூடாதென தற்போதைய அரசு அரசியல் தீர்வுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதன் நிமித்தம் வழிகாட்டல் குழுவும், உப குழுக்களும் அமைக்கப்பட்டன. வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை தொடர்பில் ஆராயவென நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழு தம் அறிக்கையை வழிநடத்தல் குழுவுக்கு கையளித்திருக்கின்றது.

இவ்வாறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள பின்புலத்தில்தான் சுதந்திர தினத்துக்கு முன்னர் புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம், இத்தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருப்பதும் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளது.


உண்மையில் இப்பிரச்சினை இனிமேலும் தொடர இடமளிக்கக் கூடாது. எல்லா தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நியாயமான முறையில் இந்தத் தேசியப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதுதான் நாட்டின் மீது உண்மையாக பற்றுக் கொண்டவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய நிலைப்பாடாகும்.

ஏனெனில், இந்நாடு தொடர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாகவோ, வளர்முக நாடாகவோ இருக்க முடியாது. இந்த நாடு சுதந்திரமடையும் போது பொருளாதார அபிவிருத்தியில் இந்நாட்டை விடவும் கீழ் மட்டத்தில் காணப்பட்ட பல நாடுகள் இலங்கையை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. அதனால் ஏனைய நாடுகளைப் போன்று இந்நாடும் முன்னேற்றமடைய வேண்டும். வளர்ச்சியடைந்த தேசமாக மாற வேண்டும் . இதுதான் இந்நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்களின் உண்மையான விருப்பமாகவுள்ளது.



இவ்வாறான நிலையில் அரசாங்கம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னெடுக்கின்ற நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பொதுஜன முன்னணி கடந்த வாரம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் இப்பிரச்சினையை நீடிக்கச் செய்வதற்கான முன் சமிக்ஞையா என்ற கேள்வியை எல்லா தரப்பினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளன.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக கொண்டு வரப்படவுள்ள அரசமைப்பு சீர்திருத்தத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாம் இடமளிக்கப் போவதில்லை' என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கூற்று நாட்டை உண்மையாக நேசிப்பவர்களைப் பெரிதும் கவலை கொள்ளச் செய்துள்ளது. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்னெடுக்கும் நடவடிக்கைகளை குழப்பும் ஒரு செயற்பாடாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.



இந்தத் தேசியப் பிரச்சினையானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் தடைக் கல்லாக இருந்து வருவதால் கட்சி அரசியல் பேதங்களுக்கப்பால் சகல தரப்புக்களும் ஒன்றுபட்டு இதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதுதான் மக்களது எதிர்பார்ப்பாகவுள்ளது. ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களின் கூற்றுக்கள் இத்தேசிய பிரச்சினையை மேலும் பல தசாப்தங்கள் நீடிக்க வழிவகுப்பனவாகவே கருதவேண்டியுள்ளது. இது நாட்டின் சுபீட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஒருபோதும் பயனளிக்கப் போவதில்லை.

ஆகவே அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து கடந்தகால அரசியல் அனுபவங்களின் அடிப்படையில் தேசிய பிரச்சினை நியாயபூர்வமாக தீர்த்து வைக்கப்பட வேண்டும். அதுவே நாட்டின் சுபீட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் செய்கின்ற பெரும் உபகாரமாக அமையும்.

இந்த நாடு பிரிக்கப்படாத ஐக்கியமான நாடாக இருக்கின்ற இறுதி சந்தர்ப்பம் இதுவென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறியிருக்கின்றார். தமிழர்கள் இளிச்சவாயர்கள், அவர்களை ஏமாற்றிவிடலாம் எனப் பெரும்பான்மை சமூகம் நினைத்தால் அவர்கள் தப்புக்கணக்கு போடுகின்றார்கள் என்பதை நினைவில் நிறுத்த விரும்புகின்றோம்.

ஏனெனில் மாறி வரும் உலக ஒழுங்கில் புவிசார் அரசியல் தேவைப்பாடுகளுக்காக வல்லரசு நாடுகள் ஏற்கனவே இருக்கின்ற நாடுகளை பிளவுபடுத்துகின்ற பல உதாரணங்களை நாம் அண்மைய வரலாற்றிலும் கண்டிருக்கின்றோம்.

தமிழர்களுக்கு தெளிவான அரசியல் பிரச்சினை இருக்கின்றது. ஆட்சி அதிகாரத்தை பெரும்பான்மை சிங்களச் சமூகம் தமிழர்களோடு பகிர்ந்துகொள்ளாமையே அதற்கு முக்கிய காரணம் .

அரசியல் தீர்வுக்கு வழிசேர்க்கும் அரசியல்யாப்பை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தமிழர்கள் திருப்திகொள்ளும் வகையில் நிறைவேற்றத்தவறினால் இனப்பிரச்சினை நீண்டு கொண்டே செல்லும். பிரச்சினை இருந்தால் நிச்சயமாக அதனை பயன்படுத்தி பெரும் வல்லரசுகள் இலங்கை விடயத்தில் தலையீடு செய்வதைத் தவிர்க்க முடியாது என்பதை அனைவருக்கும் மீண்டும் நினைவூட்டுகின்றோம்.

நன்றி : - ஆதவன்



# மீண்டும் குரேயை ஆளுநராக்குங்கள்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்






யாழ்ப்பாணம், ஜன. 08

வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் ரெஜினோல்ட் குரேயை நியமிக்கக் கோரி யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவன் அறைக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் சாவகச்சேரி சமுர்த்திப் பயனாளிகள், சித்த மருத்துவ மாணவர்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள கிராம மட்ட அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், ஆளுநர் ரெஜினோல்ட் குரே தமிழ் மொழி பேசக் கூடியவராக இருக்கின்ற நிலையில் தமது தேவைகளை உடனடியாகத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது எனக் கூறினர்.

மீண்டும் வடக்கு மாகாண ஆளுநராக ரெஜினோல்ட் குரேயை நியமிக்கக் கோரிய மூன்று மகஜர்களை யாழ்.மாவட்ட உதவி அரச அதிபர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதியிடம் கையளித்தனர். (ஐ-07)

## நாயாறு மீனவரால் கடலில் மீட்கப்பட்ட வலைகள் பொலிஸாரிடம் கையளிப்பு



முல்லைத்தீவு, ஜன. 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறுப் பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கடலில் மிதந்து வந்த ஒரு தொகுதி வலைகளை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தனர்

இந்த வலைகள் முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் மீனவர்களால் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வலைகள் அண்மையில் வலைஞர் மடம் பகுதியில் கரையொதுங்கிய இந்தியப் படகில் இருந்த வலைகளை ஒத்தவையாகக் காணப்படுவதாகவும் கூறப்பட்டது. (ஐ)

# ஒருமித்த நாடு சமஷ்டி அல்ல

## ஒற்றையாட்சியே என்கிறார் டக்ளஸ்



யாழ்ப்பாணம், ஜன. 08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதுபோல் ஒருமித்த நாடு என்பது சமஷ்டி அல்ல அது ஒற்றை ஆட்சியே . வார்த்தை யாலங்கள் தமிழ் மக்களையும் சிங்கள் மக்களையும் ஏமாற்றும் செய்லே என ஈழ மக்கழ் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் .

பருத்தித்துறையில் நடைபெற்ற கட்டியின் பிரதேச செயற்பாட்டாள்கள் பொறுப்பாளர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது தென்னிலன்கையில் ஏற்பட்டுல்ல அரசியல் இழுபறி நிலமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாண்ட விதமானது தமிழ் மக்களை மேலும் பல சிக்கல்களுக்குள்ளேயே கொண்டு சென்றுள்ளது.

இந்த அரசியல் குழப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்திச் செயற்படாது அதைத் தமது சுயநலன்களை முன்னிறுத்தி ஒருபக்கச் சார்பாகச் செயற்பட்டமையால் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பம் மீண்டும் அடிபட்டு போகும் நிலையே காணப்படுகின்றது.

அந்தவகையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்று தருவதாக கூறிப் பொய்யான கருத்துக்களைப் பரப்பச் செய்து மக்களை ஏமாற்று செயற்பாடுகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் தற்போதும் ஒருமித்த நாடு என்றால் சமஷ்டி என்று கூறி மக்களை ஏமாற்ற முற்படுகின்றனர்.

ஆனால் ஒருமித்த நாடு என்பது சமஷ்டி அல்ல. அது ஒற்றை ஆட்சியே என நாம் ஆரம்பத்திலுருந்தே கூறிவருகின்றோம்–என்றார். (ஐ)

## முதியவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜன. 08

கிளிநொச்சி உதயநகர்கிழக்குப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இலக்கம் 61 உதயநகர் கிழக்கில் சிறு வியாபாரம் செய்து வரும் ஐயம்பிள்ளை நாகேசு (வயது-74) என்பவரே நேற்றுக் காலை தூக்கில் தொங்கிய நிலையில் உறவினர்களால் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணம் தொடர்பாக திடீர் மரணவிசாரணை அதிகாரி, பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

## வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 20 மாணவருக்கு சைக்கிள்கள்

முல்லைத்தீவு ஜன. 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 20 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

நாளை முல்லைத்தீவு அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த மாணவர்களுக்கான சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன் தினம் காலை முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் வைத்து இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

நாளை முல்லைத்தீவு அமைப்பின் தலைவரும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினருமான க.விஜிந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ஆ. புவனேஸ்வரன், செ.மயூரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர் இ.ரவீந்திரன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தியாகராசா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க. ஜெனமேஜயந்த், முள்ளியவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரமேஸ் ரத்னாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சைக்கிள்களை வழங்கினர். (ஐ)

# கிளாலி மக்களின் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்தார் சிறிதரன் எம்.பி



யாழ்ப்பாணம், ஜன. 08

கிளாலி பொது அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கிளாலி கிராமத்துக்கு விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

பயன்பாடற்ற காணிகளை விவசாயத் தேவைகளுக்காக மக்களுக்கு பகிர்ந்தளித்து விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதுடன் மக்களின் சுயசார்பு பொருளாதாரத்தை எவ்வாறு கட்டமைப்பது என்பது தொடர்பாகவும் அவர் ஆராய்ந்தார்.

அத்துடன் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், வெள்ளப் பாதிப்புக்களையும் பார்வையிட்டதுடன், அண்மைக் காலமாகக் கிளாலிப் பகுதியில் தன்னால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் பார்வையிட்டார்.

இந்தக்களப்பயணத்தில் நாடாளுமன்ற உறுப்பினருடன் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் உப தவிசாளர் கஜன் உறுப்பினர்களான த.றமேஸ், வே.கோகுலராஜ, கி.வீரவாகு தேவர் ஆகியோருடன் கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவரும் கட்சியின் கிளாலி வட்டார அமைப்பாளருமான செல்லா, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# தொடரை வென்றது தென்னாபிரிக்க அணி

தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இது தென்னாபிரிக்கா அணி சொந்த மண்ணில் கைப்பற்றும் 7ஆவது தொடராகும்.

கேப்டவுனில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 177 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக அணித் தலைவர் சப்ராஸ் அஹமட் 56 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஒலிவியர் 4 விக்கெட்டுகளையும், டேல் ஸ்டெயின் 3 விக்கெட்டுகளையும், காகிஸோ ரபாடா 2 விக்கெட்டுகளையும், வெரோன் பிளெண்டர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைதொடர்ந்து, பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 431 ஓட்டங்களை குவித்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக டு பிளெஸிஸ் 103 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் மொஹமட் ஆமிர் மற்றும் சயீன் அப்ரிடி ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதன்பிறகு 254 ஓட்டங்கள் பின்னிலையில், தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, 294 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதனால் 40 ஓட்டங்கள் தென்னாபிரிக்கா அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸில், பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்ச ஓட்டங்களாக அசாட் சபீக் 88 ஓட்டங்களையும், பாபர் அசாம் 72 ஓட்டங்களையும், ஷான் மசூத் 61 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் டேல் ஸ்டெயின் மற்றும் ரபாடா ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனையடுத்து 40 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு ஆடக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 9.5 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் தென்னாபிரிக்கா அணி 9 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா அணியின் தலைவர் டு பிளெஸிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 11ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

# ஆஸ்திரேலிய மண்ணில் 71 வருடங்களின் பின்னர் சாதனை படைத்த இந்தியா!



இந்தியா – ஆஸ்திரேலியாவுக்கு இடையேயான இறுதி டெஸ்ட் போட்டி மழை காரணமாகத் தடைபட்டுள்ளதால், போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதன் காரணமாக இந்த டெஸ்ட் தொடரை இந்தியா அணி 2:1 என கைப்பற்றியுள்ளது.

கடந்த 96 ஆம் ஆண்டில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய இந்திய அணி ஒரு முறை கூட தொடரைக் கைப்பற்றவில்லை.

இந்நிலையில் 2018/19 ஆம் ஆண்டுக்கான குறித்த தொடரை விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி வெற்றி பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

மேலும் இதுவரை நடைபெற்ற 14 போர்டர் – கவாஸ்கர் கிண்ணத் தொடரில் இந்திய அணி 8 முறையும் ஆஸ்திரேலிய அணி 6 முறையும் வெற்றிகொண்டுள்ளதுடன் ஒரு தொடர் சமநிலையில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸியில் 5 விக்கெட் குல்தீப் யாதவ் சாதனை

அந்நிய மண்ணில் முதல் முறையாக 5 விக்கெட்டுகள் கைப்பற்றி இந்திய வீரர் குல்தீப் யாதவ் சாதனை படைத்துள்ளார்.

சிட்னியில் இடம்பெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியிலேயே அவர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

இந்தப் போட்டியில் குல்தீப் யாதவ் ஆஸ்திரேலிய அணியின் கவாஜா (27), ஹெட் (20), பெய்னி (5), லையன் (0), ஹேசில்வுட் (21) என 5 வீரர்களை வீழ்த்தி இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இந்திய அணியின் பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் மொத்தம் 2 முறை 5 விக்கெட்டுகள் எடுத்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# சிட்னி சிக்ஸர்ஸ் வெற்றி!

பிக்பஷ் ரி-20 தொடரின் 22ஆவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும் அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அடிலெய்ட் ஸ்ரைக்கர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 150 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஜெக் வெதரெல்ட், 50 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ஸ்டீவ் ஒகீப் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, 151 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 18.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஜோ டென்லி ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் ரஷீத்கான் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பில், ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஜோ டென்லி தெரிவுசெய்யப்பட்டார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி, திகணை பிரதேசத்தில் விகாரையொன்றில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அதிகாரப் பகிர்வின் மூலம் அல்லது வேறு ஏதாவது வழிகளின் மூலம் சுயாட்சிக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன எனவும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது நாடாளுமன்றத்தில் இந்த அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க உதவியது வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனியான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கவே எனும் வகையிலும் பல்வேறுபட்ட பொய்ப் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆனால் இவை அனைத்தும் முற்றுமுழுதாகப் பொய்யானவையாகும்.

கடந்த வருடம் இந்தத் திகணப் பிரதேசத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத இனவாதச் செயற்பாட்டின் போது அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த இந்திரசார விகாரையின் விகாராதிபதி கெரடிகல சந்தவிமல தேரர் செய்த பங்களிப்பினையும், அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியையும் முஸ்லிம் சமூகம் கௌரவத்துடன் ஞாபகத்தில் வைத்துள்ளது. இந்த அரசாங்கம் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயலாற்றிக்கொண்டிருக்கும் அதே வேளை அவ்வப்போது வெவ்வேறு பிரதேசங்களில் சில அசம்பாவிதங்கள் நடைபெறுவதையும் நாம் அறிவோம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எங்களின் மத்தியில் ஏற்படுகின்ற முரண்பாடுகளும், சரியான புரிதல் இன்மையும் பிரச்சினைகள் மேலும் வளர்ச்சியடையக் காரணமாகின்றன. இருப்பினும் இந்த சம்பவங்களுக்கு பின்னனியில் திட்டமிடப்பட்ட முறையில் செயல்பட்ட கண்ணுக்கு தெரியாத சக்திகள் இருந்து வந்தமை பின்னர் நடைபெற்ற விசாரணைகளின் போது தெளிவாகியது. இவ்வாறான அசம்பாவிதங்களை தவிர்க்க நமக்குள் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.

இந்த நாட்டில் திட்டமிட்டு ஒருவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவது அல்லது தொந்தரவு செய்வதனை அனுமதிக்க முடியாது. இருப்பினும் ,அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கங்களுக்காக இவ்வாறான செயற்பாடுகளின் பின்புலத்தில் மறைமுக சக்திகளாக இருந்து செயற்பட்டு பொதுமக்களின் அவதானத்தை கவர்ந்திழுக்க முயற்சி செய்கின்றனர். கடந்த 52 நாள்களாக இந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலைமையோடு மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்புகின்ற முயற்சியில் தற்போது இறங்கியுள்ளனர்.

இந்த நாட்டில் அரசமைப்பில் சில மாற்றங்களைக் கொண்டு வர முடியுமான இடத்தில் நாங்கள் இருந்து கொண்டு சட்டமன்ற செயற்குழுவொன்றை உருவாக்கியுள்ளோம். அதில் எங்களது கட்சியைப்போலவே ஆளும் கட்சியினர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் கட்சியினர் என பலர் அங்கம் வகிக்கின்றனர். இந்தச் செயற்குழுவினூடாக கலந்துரையாடல் மேற்கொண்டு அரசமைப்பில் சில மாற்றங்களை மேற்கொண்டோம். அந்த மாற்றங்களில் இந்த நாட்டில் புத்தசாசனத்திற்கு வழங்கப்பட்டுள்ள உயர்ந்த அந்தஸ்தை சிறிதேனும் குறைப்பதற்கான எவ்விதமான யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே அந்தஸ்தைக் குறைவில்லாமல் வழங்குவதோடு ஏனைய மதங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தினையும் அதே அளவில் வழங்குவதே சிறந்தது என எல்லோரும் கருத்துதெரிவித்தோம்.

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எவ்விதத்திலும் பாதகம் ஏற்பாடாத வகையில் சில சொற்களில் திருத்தங்கள் மேற்கொள்ள நாங்கள் ஆலோசனைகூறினோம். சிலர் தமிழ் மொழியில் உள்ள ஒற்றுமை என்ற சொல்லுக்கான பிழையான அர்த்தத்தை கற்பித்துக்கொண்டு மக்களைதூண்டிவிட முயற்சிசெய்கிறார்கள். இவர்களின் அரசியல் நோக்கம் கொண்ட இந்த செயற்பாடு தொடர்பில் நாங்கள் கவலையடைகிறோம்.

நாடாளுமன்ற யாப்பில் கூடுதலாகஎந்ததிருத்தம்கொண்டு வந்தாலும் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும். அப்போதுதான் அது சட்டமாக அங்கீகரிக்கப்படும். எனவே பௌத்த மதத்தின் அந்தஸ்தை கேள்விக்குட்படுத்தும் எவ்விதமான திருத்தங்களும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவில்லை என்பது இதன் மூலம் உறுதியாகிறது. அத்தோடு நாடாளுமன்றத்தில் அதிகமாக உள்ளவர்கள் பௌத்த தர்மத்தை பின்பற்றுகின்றவர்கள். அவர்கள் இவ்வாறான ஒரு சட்டத்தைநிறைவேற்ற ஒருபோதும் உடன்படமாட்டார்கள். வெறும் அரசியல் உள்நோக்கங்களுக்காக மக்களை அச்சத்திற்குள்ளாக்கும் செயலாகவே இதனை பார்க்கவேண்டும்.

அரசின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள பல்வேறுபட்ட பொய்களை இவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மக்களை ஏமாற்றுவதாக சொல்லுகிறார்கள். இவை பச்சைப்பொய். நாங்கள் சிறுபான்மைச் சமூகத்தின் குரலாக தனித்துவமாக இயங்கி வருகின்றோம். எம்மைத்தனிமைப்படுத்தி அழுத்தங்களின்மூலம் அடிபணிய வைப்பதே இவர்களது நோக்கமாகும். ஆனால் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார தடைகளை எமது பிரதமர் சர்வதேச நாடுகளுடன் பேசி புத்திசாலித்தனமான கொடுக்கல், வாங்கல் மூலம் தீர்த்துள்ளார். அதற்கான காரணம் சர்வதேச நாடுகள் எதிர்பார்த்த, ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றங்களை இந்த அரசு செய்தமையாகும். இந்த நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அதனை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.

இப்போது ஏற்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாடு தொடர்ந்தும் எதிர்காலத்திலும் பாதுகாக்கப்படவேண்டும். எனவே தவறான வதந்திகள், பொய்யான பிரச்சாரங்கள் தொடர்பில் நாம் கவனமாக இருக்க வேண்டும்–என்றார். (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புக்கான வரைவு நகல் குறித்தும், 'ஒருமித்த நாடு', 'ஒற்றையாட்சி' ஆகிய சொற்பதங்கள் சம்பந்தமாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவது தொடர்பான அறிவிப்பையும் சம்பந்தன் இந்தக் கூட்டத்தில் வெளியிடுவார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## நாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாமல் குமாரவுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவரால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான விசாரணைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

அதனைவிடுத்து அவரை முதலில் விசாரணை செய்யும் நடவடிக்கையில், சதித்திட்டம் இருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம்.

நாமல் குமாரவினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொலிஸார் முறையான விசாரணைகளை நடத்தி முடிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அவர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வது சாட்சிகளை வலுவிழக்கச் செய்யும் செயலாகும்.

அதனால் நாமல் குமாரவுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதுடன், பொலிஸாரின் விசாரணைகளில் அழுத்தங்கள் இல்லாமல் அவர் விசாரிக்கப்பட வேண்டும் – என்றார். (ஐ)

## மாணவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவேண்டும் என்று கோரி நீதி அமைச்சரால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தம் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் கூடிய ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவையால் ஒப்புதலளிக்கப்பட்டது.

சட்டம் தொடர்பான அடிப்படை அறிவை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது தற்போதைய அரசுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

அரசமைப்பு தொடர்பான அடிப்படைச் சட்டங்கள் குறித்து சிறு வயதிலேயே அறிந்து கொள்வதன் மூலம் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கச் சட்டக் கல்வி அனைத்துக் குடிமக்களுக்கும் கைகொடுக்கும்.

எனவே சட்டக் கல்வியைப் பாடப் புத்தகங்களில் உள்ளடக்குவது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டங்கள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் முன்னெடுக்கப்படும் என்று நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட நடவடிக்கையைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராட்டியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன் தினம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதமர் சந்தித்தார். இதன்போது அவர் இவ்வாறு பாராட்டினார். இதற்காக ஜனாதிபதி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி செயற்படுமாறு பிரதமர் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களை இதன்போது கேட்டுக் கொண்டார்.

கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கான தலைவர்களை நியமிக்கும்போது அவர்களுக்குரிய தகுதிகளைக் கண்டறிந்து பரிந்துரை செய்வதற்காக குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியிருந்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கை அண்மையில் வெளியானது. ஜனாதிபதியின் இரண்டு பிரதிநிதிகளும், பிரதமரின் இரண்டு பிரதிநிதிகளும், நிதியமைச்சின் ஒரு பிரதிநிதியும் இந்தக் குழுவில் உள்ளடங்கவேண்டும் என்பது இந்த சுற்றறிக்கையின் விதிமுறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 4 தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது, காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினர் அவர்களின் படகைப் பறிமுதல் செய்தமையுடன், கைது செய்யப்பட்ட மீனவர்களைக் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தடுத்து வைத்தனர்.

அவர்களை விசாரணைகளின் பின்னர் வடக்கு மாகாணக் கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக காங்கேசன்துறைக் கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ-07)

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி சுரேன் ராகவன், கடந்த நவம்பர் மாதம், ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுப் பணிப்பாளராகவும், ஜனாதிபதியின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

அதேவேளை, தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், ஊவா மாகாண ஆளுநராகவும், மூத்த விரிவுரையாளர் தம்மதிசநாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுனராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிகளைப் பொறுப்பேற்றனர். (ஐ)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாமதமடைந்துள்ளது என்று இந்திய விமானத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை வரையுமாறு, இந்தியாவின் விமான நிலைய அதிகார சபையிடம் கடந்த செப்ரெம்பர் மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சு கோரியிருந்தது.

எனினும், இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்துக்கு இன்னமும், இந்திய வெளிவிவகார அமைச்சு பச்சைக்கொடி காண்பிக்கவில்லை என்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மியன்மாரின் காலே மற்றும் இலங்கையின் பலாலி விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சுடன், இந்திய விமான நிலைய அதிகாரசபை புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டிருந்தது என்று இந்தியாவின் விமான போக்குவரத்து இணை அமைச்சர் ஜயந்த் சின்ஹா, கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார்.

மியன்மார் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளபோதும், இலங்கையில் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளால், வெளிவிவகார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தனது பெயரை வெளியிட விரும்பாத, இந்திய விமான நிலைய அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு இன்னமும் பலவீனமாக உள்ளது. வரும் மாதங்களில் உறவுகள் வலுவடைந்தால், நிச்சயமாக நாங்கள் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிகளை முன்னெடுப்போம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

## ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் தற்போது பெரும்பான்மையற்ற அரசுதான் இருக்கிறது. அரசுக்கு நாடாளுமன்றில் 113 ஆசனங்கள் இல்லை.

இந்த அரசுக்குச் சில செயற்பாடுகள் இருக்கின்றன. இவை மக்கள் முற்றாக நிராகரித்தவையாகும். இதனை மக்கள் எதிர்ப்பார்க்கவில்லை.

ஸ்திரமாக முடிவுகளை எடுக்கும் அரசு அன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கட்டுப்பட்ட அரசாகவே இது இருக்கிறது. குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே அரசை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அவருடன் இணைந்துகொண்டு சர்வதேசத்தினர், புலம்பெயர் அமைப்பினர் அனைவரும் அரசைக் கட்டுப்படுத்துகிறார்கள். இதனாலேயே, புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதனை மக்கள் என்றும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இது அரசுக்கும் நன்றாகத் தெரியும். ஆனாலும், மக்களின் விருப்பத்துக்கு மாறாக இதனைக் கொண்டுவரவே அரசு முயற்சித்து வருகிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமரன் உள்ளிட்ட தரப்பினர், மஹிந்த மற்றும் கோட்டாவுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்கள்.

இந்த வழக்கை சிவானி தியாக ராஜா எனும் சட்டத்தரணி ஊடாக கொண்டு செல்லவும் தீர்மானித்துள்ளார்கள். இதனைச் சாதாரண ஒரு விடயமாக நாம் கருதமுடியாது. இதற்காக தற்போது, சர்வதேச மட்டத்திலான சட்டத்தரணிகளின் ஆலோசனைகளையும் பெற்றுவருகிறார்கள்.

அத்தோடு, யஸ்மின் சூகாவும் இலங்கை இராணுவத்தின் 57 தளபதிகளைச் சர்வதேச நீதிமன்றின் ஊடாகச் சிறையில் அடைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார். இவ்வாறு இவையனைத்தும் இன்று சர்வதேச உதவியுடன் இடம்பெற்று வருகின்றன.

இதற்குச் சமமான பயங்கரமான செயற்பாடுகள் எமது நாட்டுக்குள்ளும் இடம்பெற்றுவருகின்றன. அந்தவகையில், மஹிந்த உள்ளிட்ட 47 உறுப்பினர்களை நாடாளுமன்றிலிருந்து நீக்கவும் முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதற்குப் பதிலாக ஏனையவர்களை நியமித்து, புதிய அரசமைப்பை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே அரசு முயற்சித்து வருகிறது. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது – என்றார். (ஐ)

## 118 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அந்தப் பொதியை அந்தப் பகுதிக்கு எடுத்து வந்தவர்கள் யார் எனத் தெரியவில்லை எனப் பொலிஸார் கூறினர்.

கடற்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய அந்தப்பகுதிக்கு நேற்றுச் சென்ற கடற்படையினர் கஞ்சாப் பொதியை மீட்டனர்.

மீட்கப்பட்ட கஞ்சாவைக் கடற்படையினர் வல்வெட்டித்துறை பொலிஸாடம் ஒப்படைத்தனர். அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்



மட்டக்களப்பு, ஜன. 08

கிழக்கு மாகாண புதிய ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்றுத் தனது கடமைகளை உத்தியோகபூர்மாகப் பொறுப்பேற்றார்.

கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஆளுநர் பதவிப் பிரமாணத்தையடுத்தே கிழக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஐ)

# வடக்கு மாகாணத்தில் பிறப்பு வீதம் உயர்வு!

## சுகாதாரத் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஜன. 08

வடக்கில் பிறப்பு வீதம் அதிகரித்து வருவதாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அதிகரிப்பு வடக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

கடந்த 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டில் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு 7ஆயிரத்து 892 குழந்தைகள் பிறந்துள்ளன. 2017ஆம் ஆண்டு 8ஆயிரத்து 152 குழந்தைகள் பிறந்துள்ளன.

அதேபோல் வவுனியா மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 572 குழந்தைகளும், 2017ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 796 குழந்தைகளும் பிறந்துள்ளன.

அதேவேளை, மன்னார் மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு ஆயிரத்து 833 குழந்தைகளும், 2017 ஆம் ஆண்டு ஆயிரத்து 839 குழந்தைகளும் பிறந்துள்ளன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு ஆயிரத்து 498 குழந்தைகளும், 2017 ஆம் ஆண்டு ஆயிரத்து 516 குழந்தைகளும் பிறந்துள்ளன.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு ஆயிரத்து 576 குழந்தைகளும், 2017ஆம் ஆண்டு ஆயிரத்து 880 குழந்தைகளும் பிறந்துள்ளன.

இவ்வாறாக வடக்கு மாகாணத்தில் 2016 ஆம் ஆண்டு 15 ஆயிரத்து 371 குழந்தைகளும், 2017ஆம் ஆண்டு 16 ஆயிரத்து 182 குழந்தைகளும் பிறந்துள்ளன.

இதன் பிரகாரம் 2016ஆம் ஆண்டை விட 2017ஆம் ஆண்டு வடக்கு.மாகாணத்தில் 811 குழந்தைகள் அதிகமாகப் பிறந்துள்ளன - என்றுள்ளது. (ஐ)

# அமீரலிக்கு கடும் எதிர்ப்பு

மட்டக்களப்பு, ஜன. 08

மட்டக்களப்பு வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தை உறுகாம நீர்ப்பாசன திட்டத்திலிருந்து பிரிப்பதற்கு இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீரலி மேற்கொள்ளும் முயற்சியைக் கைவிடுமாறு கோரிச் செங்கலடியில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வாகனேரித் திட்ட முகாமைத்துவக்குழுவின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள 14 அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் கி.துரைராசசிங்கம், முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மாவட்டக் காணி மேலதிக அரச அதிபர் நவரூபரஞ்சனி முகுந்தனிடம் கோரிக்கைகள்




அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்பாது கருத்து தெரிவித்த விவசாயிகள், வாகனேரி திட்டம் தனியாகப் பிரிந்து செல்வதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். விவசாயிகள் தொடர்பான திட்டங்களை கொண்டுவரும்போது சம்மந்தப்பட்டவர்களுடன் முதலில் கலந்தாலோசனை செய்ய வேண்டும் - என்றனர். (ஐ)

# உணவு கொடுத்த பெண்ணிடம் கமராவை பறித்தெடுத்த யானை

## கதிர்காமத்தில் சம்பவம்



கொழும்பு, ஜன. 08

யானையொன்றுக்கு உணவு கொடுக்க முயற்சித்த ஆஸ்திரேலியா பெண்ணின் கையிலிருந்த வீடியோ கமராவை யானை பறித்துச் சென்ற சம்பவமொன்று, புத்தலை - கதிர்காமம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து, கோனகங்கார பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து பொலிஸார் பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு, யானையிடமிருந்து கீழே விழுந்த வீடியோ கமராவை எடுத்து, ஆஸ்திரேலியா பெண்ணிடம் ஒப்படைத்தனர்.

புத்தலை - கதிர்காமம் வழியில் யானை ஒன்று அவ்வழியாகச் செல்லும் மக்களிடமும், வாகனங்களில் செல்வோரிடமும் உணவு வகைகளை பெற்றுக்கொண்டும் இருந்து வருகின்றது.

இந்நிலையில், ஆஸ்திரேலிய நாட்டுப் பிரஜையான பெண் உல்லாசப் பிரயாணியும், அவரது காதலனும் ஜீப் வாகனத்தில் அவ்வழியாகப் போகும்போது, யானை வருவோர் செல்வோரிடம் உணவு வகைகளை பெற்றுக் கொள்வதைக்கண்டு, ஆஸ்திரேலியப் பெண்ணும் உணவை ஒரு கையால் வழங்கிக்கொண்டு, மறு கையில் வீடியோ கமரா மூலம் பதிவு செய்து கொண்டு இருந்தார்.

யானை அந்தப் பெண்ணிடம் தனது துதிக்கையினால் உணவைப் பெற்றுக்கொண்டதுடன், வீடியோ கமராவையும் துதிக்கையினால் பறித்துக்கொண்டு திரும்பியது.

தமது வீடியோ கமரா பறிக்கப்பட்டமை குறித்து அப்பெண் பொலிஸாருக்குத் தகவல் வழங்கவே பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை எடுத்து பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு, யானையிடமிருந்து கீழே விழுந்திருந்த வீடியோ கமராவை எடுத்து, ஆஸ்திரேலியா பெண்ணிடம் ஒப்படைத்தனர்.

பெறுமதிமிக்க இந்த வீடியோ கமராவைப் பெற்றுக்கொடுத்த கோனகங்கார பொலிஸாரை ஆஸ்திரேலியப் பெண்ணும், அவரது காதலனும் வெகுவாகப் பாராட்டினர். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1000 வழங்கப்படவேண்டும்

## மஹிந்த அணியும் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 08

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என்று மஹிந்த அணியும் வலியுறுத்தியுள்ளது.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே சி.பி.ரட்னாயக்க எம்.பி. இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மத்திய வங்கியையே கொள்ளையடித்த இந்த ஆட்சியாளர்கள் தொடர்பில் மக்களின் நிலைப்பாட்டைத் தேர்தல் ஊடாக அறிவதற்கு தயாராகவே இருக்கின்றோம்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக தெரிவான பின்னர் முன்னெடுக்கப்பட்ட 55 நாட்கள் அரசியல் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

பல சுற்றுப் பேச்சுகள் நடத்தப்பட்டு, இறுதியில் 900 ரூபாவை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது. அத்துடன், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன.

இவ்வாறானதொரு நிலையில்தான் நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து ஜனாதிபதி, புதிய பிரதமரை நியமித்தார். எனவே, புதிய அரசு குறித்து மக்களின் நிலைப்பாட்டை அறிய ஆவலாக உள்ளோம். விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் - என்றார். (ஐ)

# 9 வயது மகளை கள்ளக் காதலனுடன் சேர்ந்து கொலை செய்த தாய் கைது!

கொழும்பு, ஜன. 08

9 வயதுச் சிறுமி ஒருவரைக் கொலை செய்து புதைத்தனர் எனச் சந்தேகிக்கப்படும் தாய் மற்றும் அவரின் கள்ளக் காதலன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை ஹாலிஎல - கன்தேகெதர சார்ணியா தோட்டம் மஹதென்ன பிரிவில் சிறுமியொருவர் அவரின் வீட்டுக்கு அருகில் மரக்கறித் தோட்டத்தில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார் எனக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய அந்த இருவரும் நேற்று முன் தினம் மாலை கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 26 மற்றும் 30 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, செட்டிகுளத்தைச் சேர்ந்த இந்தச் சிறுமியின் தாய் அவரது கணவனைப் பிரிந்து கள்ளக்காதலனுடன் ஹாலிஎல பகுதியில் வசிந்து வந்துள்ளார்.

இந்தச் சிறுமி தாயின் தங்கையிடம் வளர்வதாகவும், 5 வருடங்களுக்கு முன்பு சிறுமியைத் தங்கையிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் தாய் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் ஜனவரி மாதம் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.